அனுப்புநர்

திரு.சா.சேதுராமவர்மா
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 025368/H1/2022 நாள்: 24.02.2023**

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6 – மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணவர்களுக்கான +2 தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுக்களை (Hall Ticket) பதிவிறக்கம் செய்தல் – அறிவுரைகள் – சார்பு.

-----

நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் தொடர்பாக, பள்ளி தலைமையாசிரியர்கள் **03.03.2023 அன்று பிற்பகல் முதல்** www.dge1.tn.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று "online-portal" என்ற வாசகத்தினை "Click" செய்து "**HIGHER SECONDARY FIRST YEAR / SECOND YEAR EXAM MARCH/APRIL 2023**" என தோன்றும் பக்கத்தில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID, Password-ஐ கொண்டு தங்கள் பள்ளி மாணவர்களது தேர்வுக்கூட அனுமதிச்சீட்டுக்களை (Hall Tickets) பதிவிறக்கம் செய்தல் குறித்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுக்கூட அனுமதிச்சீட்டுகளை மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் தவறாமல் பதிவிறக்கம் செய்துகொள்ளவேண்டும். இதற்கு அனைத்து தலைமையாசிரியர்கள் ஒத்துழைப்பு அளிக்க அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்று ம் தனியார் பள்ளிகள்).